# கிறிஸ்துவின் வசனம்
# WORD OF CHRIST

மரம் 2

ஜூலை 1994

கனி 12

பரிசுத்த வேதாகமம் கொலோசெயர் 3:16



ஆசிரியர்

சகோ. அர்ச்சுணன் M.A.,A.Bs.,


## பிறவிக்குருடனின் விசுவாசம்
## The faith of born blind

யோவான் எழுதின சுவிசேஷம் 9ம் அதிகாரம் முழுவதையும் வாசிக்கும் போது பரிசேயரும், யூதர்களும் கேட்ட கேள்விகளுக்கு ஐந்-து முறை மறுதலியாமல் விசுவாசித்து, அறிக்கை செய்த பிறவிக் குருடனைப் பற்றி சொல்லப்படுகிறது. இன்றைய நாளில் வாழக் கூடிய நமக்கு இது முன் உதாரணமாக இருக்கிறது. அநேகருடைய விசுவாசம் பரீட்சிக்கப்படும்போது சோர்ந்துபோய் இயேசுவை மறுதலித்து விசுவாசத்தைவிட்டு வழுவிப் போகிறார்கள். இயேசுவுடனே இருந்த சீஷனாகிய பேதுருவைப் பாருங்கள்! இவன் மூன்று முறையும் இயேசுவை மறுதலித்தான். காரணம் பயம் ஆனால் இந்த பிறவிக் குருடன் அப்படியல்ல. கர்த்தர் இவனுக்குச் செய்ததை பகிரங்கமாக அறிக்கையிட்டான்.

**முதலாவது** யோவா 9:10ல் உன் கண்கள் எப்படி திறக்கப்பட்டது என்றார்கள். அவன் பிரதியுத்தரமாக: இயேசு என்னப்பட்ட ஒருவர் சேறுண்டாக்கி என் கண்களின் மேல் பூசி, நீ போய் சீலோவாம் குளத்திலே கழுவு என்றார். அப்படியே நான் போய் கழுவி,பார்வையடைந்தேன்என்றான். நடந்ததை அப்படியேஒளிவு, மறைவு இன்றி இக்குருடன் சொல்வதை வாசிக்கின்றோம். நமக்கும் கர்த்தர் எவ்வளவோ அற்புதங்களையும் செய்திருக்கிறார். நாமோ கேட்பவர்களிடம் கர்த்தர் என்ன செய்தார் என்று அலட்சியமாக சில வேளைகளில் பதில் சொல்லிவிடுகிறோம். இதைக் கேட்பவர்களின் விசுவாசத்தயையும் கவிழ்த்துப் போடுகிறோம்.

இரண்டாவதாக யோவான் 9:15ல் நீ எப்படி பார்வை யடைந்தாய் என்று மறுபடியும் கேட்டார்கள் அதற்கு அவன்: அவர் என் கண்களின் மேல் சேற்றை பூசினார் நான் கழுவினேன் காண்கிறேன் என்றான். பரிசேயரிடத்திற்குக் கொண்டு போகப் பட்ட இந்த குருடன், அவர்களைப் பார்த்து பயப்படவில்லை மாறாக கர்த்தர் இவனுக்கு செய்ததை மறுபடியுமாக அப்படியே அறிக்கையிட தயங்கவில்லை. ஆ! என்ன ஆச்சரியம் என்று பார்த்தீர்களா?

மூன்றாவதாக யோவான் 9:17ல் நீ என்ன சொல்லுறாய் என்றார்கள். அதற்கு அவன்: அவர் தீர்க்கதரிசி என்றான். இந்த குருடனை நம்பாமல் இவனிடத்தில் கேட்டால் இப்படித் தான் சொல்லுவான் என்று அறிந்து இவன் தாய் தகப்பன்மாரை அழை த்து கேட்கலாமென்று அவர்களை அழைக்கிறார்கள். அப்பொழுது குருடனுடைய தாய் தகப்பன்மார் யூதருக்குப் பயந்து அவனையே கேளுங்கள் என்று என்று சொல்லுகிறார்கள். பாருங்கள் !யூதருக்கு எப்படி பயப்பட்டுக்கொண்டு இருந்த காலம். தாய் தகப்பன்மாரே பிள்ளையை ஒப்புக் கொடுக்கிறார்கள். எங்களுக்குத் தெரியாது என்று மறுதலித்து பயந்து போய் அவனையே கேளுங்கள் என்று சொல்லுகிறார்கள். காரணம் யாராவது இயேசுவைகிறிஸ்துஎன்று அறிக்கை பண்ணினால் அவன் ஜெப ஆலயத்துக்கு புறம்பாக்கப்பட வேண்டும் என்ற கட்டளையையூதர்கள் அறிவித்திருந்தார்கள். இக் கட்டளைக்கு குருடன் பயப்பட்டானா? இல்லை வல்லமையோடு அறிக்கை செய்தான் பிரிய நண்பனே! நீ எப்படி அறிக்கைசெய்யப் போகிறாய்?

நான்காவதாக யோவான் 9:24ல் நீதேவனை மகிமைப் படுத்து. இந்த மனுஷன் பாவியென்று நாங்கள் அறிந்திருக்கிறோம் என்றார்கள். அவன் பிரதியுத்தரமாக அவர் பாவியென்று எனக்குத் தெரியாது; நான் குருடனாயிருந்தேன், இப்பொழுது காண்கிறேன் இது ஒன்றுதான் எனக்குத்தெரியும்என்றான். அவர்கள் ஆண்டவரை பாவியென்று சொல்லும்போது கூட, இவன் ஆண்டவர் தனக்கு கொடுத்ததை அறிக்கையிடுகின்றான்

ஐந்தாவதாக யோவான் 9:26ல் உன் கண்களை எப்படி திறந் தான் என்றார்கள் அவன் பிரதியுத்தரமாக: முன்னமே உங்களுக்குச் சொன்னேன் நீங்கள் கேளாமல் போனீர்கள்; மறுபடியும் கேட்க வேண்டியதென்ன? அவருக்கு சீஷராக உங்களுக்கும் மனதுண்டோ என்றான். "விசுவாசம் கேள்வியினாலே வரும், கேள்வி தேவனுடைய வசனத்தினாலே வரும்" என்ற வசனத்திற்கு ஏற்ப மறுபடியும், மறு படியும் அவர்கள் இதைக் குறித்து அவனிடத்தில் கேட்க ஆரம்பிக்கும்

போது இந்த முறை அவன், அவருக்குச் சீஷராக உங்களுக்கு மனதுண்டோ என்று கேட்டதை வாசிக்கின்றோம். பார்வையடைந்த இவன் இறுதியில் அவர்களுக்கு போதிக்கவே ஆரம்பித்து விட்டான். அவர் என் கண்களைத் திறந்திருந்தும், அவர் எங்கேயிருந்து வந்தவர் என்று நீங்கள் அறியாதிருக்கிறது ஆச்சரியமான காரியம். அவர் தேவனிடத்திலிருந்து வராதிருந்தால் ஒன்றும் செய்யமாட்டாரே என்றான்.

இச்செய்தியை வாசிக்கும் அன்பரே! பிறவிக் குருடனாயிருந்து ஆண்டவர் இயேசுகிறிஸ்துவினாலே பார்வையடைந்த இவனிடத்தில் பரிசேயரும், யூதர்களும் ஐந்து முறையும் கேட்ட கேள்விகளுக்கு மறுதலியாமல் விசுவாசத்தோடு அறிக்கை செய்ததை படித்தோம். நீங்கள் [illegible] இந்த ஆண்டவர் இயேசுவைக் குறித்து உலகிற்கு எடுத்து சொல்லப் போகிறீர்கள்? இது ஒரு நல்ல பாடமாக நமக்கு இருக்கிறது 1 பேதுரு 3:15 ன் படி நம்மிடத்தில் விசாரித்து கேட்கிற யாவருக்கும் சாந்தத்தோடும், வணக்கத்தோடும் உத்தரவு சொல்ல எப்பொழுதும் ஆயத்தமாயிருப்போம் கர்த்தர் உங்களை வழிநடத்துவாராக!

**0 சபைச் செய்திகள்:**

ஜுன் 19ம் தேதி இரு கண்களும் பார்வையிழந்த பொன்னர் என்ற வாலிப சகோதரன் கிறிஸ்துவுக்குக் கீழ்ப்படிந்து வைகை ஆற்றில் ஞானஸ்நானம் பெற்றுக்கொண்டார். இவருக்கு சகோ. அர்ச்சுனனும், சகோ. நாகராஜனும் உதவியாக இருந்து வழிநடத்தினார்கள்.

**0 ஜுன் மாத வேத அறிவுப் போட்டியில் வெற்றி பெற்றவர்கள்.**

| | |
|---|---|
| 1. சகோ. தயாளன் | கோயம்புத்தூர் |
| 2. சகோதரி. மேரி | வத்தலக்குண்டு |
| 3. ,, ஸ்டெல்லா | ,, |
| 4. சிறுவர் ஜெயக்குமார் | நாராயணவலசு |
| 5. சிறுமி ஜாஸ்மின் | வத்தலக்குண்டு |
| 6. ,, முனியம்மாள் | ,, |
| 7. சிறுமி அனிதா | சொக்கலிங்கபுரம் |
| 8. சிறுவர் கோபி | வத்தலக்குண்டு |

**0 ஜுன் மாத இதழின் விடைகள்**

1 யாக்கோபு ஆதி 35:4
2. ஞானமே பிர 9:18
3. யோசேப்பு மத் 27:57
4. பிழைப்பு 1கொரி 9: 14
5. விசுவாசிகளானபோபது எபே 1:13

6. தேவனை மகிமைப்படுத்தக்கடவன்
7. கர்த்தர்
8. வேத வசனங்களை
9. கர்த்தர்
10. தவறு

**O சிறுவர் வேத அறிவுப் போட்டி விடைகள்**

1. இரத்தத்தினாலே எபே 2:13
2. கர்த்தருக்கென்றே எபே 6:8
3. சபைக்குத் எபே 5:23
4. கிறிஸ்துவின் சரீரமாகிய சபையானது எபே 4:12
5. இடங்கொடாமலும் எபே 4:27

**O இம் மாத வேத அறிவுப் போட்டி**

முதல் ஐந்திற்கு வசன ஆதாரத்துடனும், கடை ஐந்திற்கு விடை மட்டும் வேதத்திலிருந்து இம்மாதம் 25ம் தேதிக்குள் ஒரு போஸ்ட் கார்டில் எழுதி அனுப்புக.

1. தேவனால் உண்டாயிருந்ததேயானால் அதை ஒழித்து விட யாரால் கூடாது?
2. நம்மில் ஒவ்வொருவனும தன்னைக்குறித்துத் தேவனுக்கு என்ன செய்வான்?
3. மேன்மை பாராட்டுகிறவன் யாரைக் குறித்துமேன்மை பாராட்டக் கடவன்?
4. நன்மைக்குக் காத்திருந்த எனக்குத் தீமை வந்தது;என்று யார் சொல்வது?
5. பகையை மறைக்கிறவன் என்ன உதடன்?
6. ஒரே சங்கீதந்தில் 21 முறை "கர்த்தாவே" என்று வரக்கூடிய அதிகாரம் எது?
7. ஆண்டவரை பார்க்காமல் விசுவாசிப்பவர்கள் பாக்கியவான் என்பது சரியா?
8. விருத்தசேதனமுள்ளவர்களுக்கா அல்லது புறஜாதிகளுக்கா அப்போஸ்தலனாயிருக்கும்படி பேதுருவை தேவன் பலப்படுத்தினார்?
9 "தீங்கநுபவி" என்று யார் யாருக்கு கடிதம் எழுதுவது?
10. ஞாயிற்றுகிழமை ஆராதனை செய்யாத சபை கர்த்தருடைய சபையா?

**O சிறுவர் வேத அறிவுப் போட்டி**

(பிலிப்பியர் புத்தகத்திலிருந்து வசன ஆதாரத்துடன் நிரப்புக)

1. தாழ்ந்திருக்கவும் எனக்குத் தெரியும்,………… எனக்குத் தெரியும்
2. கர்த்தருக்குள் எப்பொழுதும் .. … .. …….. என்று மறுபடியும் சொல்லுகிறேன்.

3. நம்முடைய குடியிருப்போ ..............
4. எனக்கு இலாபமாயிருந்தவைகளெவைகளோ அவைகளைக்
......... நஷ்டமென்று எண்ணினேன்.
5. கிறிஸ்து எனக்கு ... ...... சாவு எனக்கு ஆதாயம்.

**O எமக்கு வந்த கடிதங்களில் சில**

1. அன்பான கர்த்தருடைய ஊழியக்கார சகோதரர் அவர்களுக்கு,

பத்திரிக்கை நீங்கள் கொடுத்த இரவே மதுரை சென்று வீட்டு 25 ம் தேதி தான் வதிலை வந்தேன். உடனே இரவு 1.30 மணிவரை வேதத்தில் புதையலை தேடுவது போல தேடி விடை கண்டுபிடித்து எழுதினேன். தாமதத்திற்கு மன்னிப்பு உண்டு என கர்த்தருக்குள் நம்புகிறேன்.

கேள்விகள் மிகவும் புதியவைகள், பத்திரிகை கூட விரிவடைந்திருப்பதைப் பார்த்து கர்த்தருக்கு நன்றி. தேவனால் கூடாத காரியம் ஒன்றுமில்லை. எல்லாம் ஆகும். கர்த்தர் உங்களை ஆசீர்வதித்துகாரியங்களை வாய்க்கச்செய்வராக. நன்றியும், வணக்கமும்.

இப்படிக்கு
அம்மா **A. MARY**
Rtd. Teacher
வத்தலக்குண்டு.

2. 27.6.94
Pondi.

Dear Beloved Brother Arjun,

Greetings to you in the name of our Lord jesus christ. I got your magazine. Very thanks to you.

May God bless Your ministry.

With Love,
**Bro. S. Sengol Rayan**

## Praise The Lord

3. அன்பு சகோதரி குளோரி அர்ச்சுனன் அவர்கள் அறிவது, போன மே மாத விடைகளில் 7 ல் தீத்து என்று பிரிண்ட் உள்ளது. விடை; கிரேத்தாத்தீவார். வசனம் தீத்து 1:12 உங்கள் ஊழியங்களுக்காக தொடர்ந்து ஜெபிக்கிறோம். கர்த்தர் செய்த கிருபைகளுக்காக அவருக்கு கோடானு கோடி ஸ்தோத்திரங்கள்.

By
**J. மேரி எலிசபெத்**

MONTHLY MAGAZINE
WORD OF CHRIST Regd No. 84661/92

★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★

குறிப்பு:

வாசகர்கள் பிழையை சரிசெய்து கொள்ளவும். சுட்டிக்காட்டிய மூன்றாவது கடித சகோதரிக்கு நன்றி.

ஆசிரியர்.

4. அன்புள்ள சகோதரர் அறிவது தாங்கள் ஏன் இப்படி தீடீரென்று பெரிய குண்டை தூக்கி போட்டு இருக்கிறீர்கள். நீங்கள் அனுப்பிய கொஸ்டின் 23ம் தேதி தான் வந்தது. ஆகவே, கூடிய சீக்கிரத்தில் அனுப்பி வைக்கவும்.

V. அனிதா

★ இவ்விதழ் இலவசமாக அனுப்பப்படுகிறது. ★

If undeliverd please return to
**THE EDITOR**
**WORD OF CHRIST**
**P. Box. No. 5**
**BATLAGUNDU-624202**
**S. India**

---

Edited and published by B. ARJUNAN, M.A., A.Bs, on behalf of church of Christ. near water tank, Batlagundu-624202.
Printer by C. PANDIYARAJAN B.Sc. Shantni Printing Press, Main Road, Batlagundu-624202. India